# திரு அவையின் சமூகப் போதனைகளின் பின்னணியில் "அரகலய" மக்கள் எழுச்சிப் போராட்டங்கள்: ஒரு நோக்கு

**மேரி ஜெறிலா, ஜெ., இரவிச்சந்திரன், ம.வி.இ**

கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகங்கள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

jerila1997@gmail.com

*இலங்கையில் ஊழல் மோசடிகள், பொருளாதார நெருக்கடி, சமத்துவமின்மை, பாரபட்சத்தன்மை, இன உரிமை மறுப்பு மற்றும் சமூக அநீதிகளுக்கெதிராக மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மக்களின் உரிமைக்கான குரலாகவே போராட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டத்தின் இலக்கு அநீதியை எதிர்ப்பதாக அமைகின்றது. 2022ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டமானது ஆய்வின் தேடலைத் தூண்டியது. போராட்டங்களின் போது மக்கள் மத்தியில் வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டு மனித மாண்பற்ற ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மக்கள் மத்தியில் சமூக அநீதிகள் அதிகரிக்க பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமெனவும் தமது உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமெனவும் வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரகலய போராட்டமானது அறுபத் தொன்பது இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை பதவி விலகச் செய்து அரசியல் மாற்றத்தினைக் கொணரக் காரணமாக அமைந்தது போராட்டத்தினால் ஏற்பட்ட வெற்றி தோல்வியினைப் பற்றிய தெளிவினைப் பெறுதலே ஆய்வுப் பிரச்சனையாக குறிப்பிடப் படுகின்றது. போராட்டங்களின் போது மக்கள் எதிர்நோக்கிய சவால்கள், மக்களுக்கு கிடைத்த நன்மை, தீமையான விடயங்கள், இடம்பெற்ற அரசியல் மாற்றங்கள் தொடர்பான விடயங்கள், போராட்டங்களின் போது திரு அவையின் பங்களிப்புத் தொடர்பான விடயங் களும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. போராட்டங்களின் வெற்றியானது ஒன்றிணைவுகள் மூலமாகவே சாத்தியப்படுகின்றன. எனவே நீதிக்காக, மனித உரிமைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களின் போது திரு அவை அங்கத்தவர்கள் பார்வையாளராக இராமல் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்து கலந்து கொண்டு நீதிக்காக குரல் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இவ் ஆய்வானது உணர்த்தி நிற்கின்றது. மேலும் மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் தொடர்பாக திரு அவைக்கு உள்ள பொறுப்பையும் அவற்றிற்கு திரு அவையின் சமூகப்போதனைகளின் பங்களிப்பையும் சுட்டிக்காட்டுகிறது. இவ் ஆய்வில் திருவிவிலியம் மற்றும் திரு அவையின் சமூக நீதிக் கருத்துக்கள் தொடர்பான விடயங்களைப் பெற்றுக் கொள்ள நூல்கள் பயன்படுத்தப்படுவனால் உய்த்தறிவு முறை பிரயோகிக்கப்படு கின்றது. மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மத்தியில் திரு அவையின் பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள சான்றுவழி ஆதாரமுறை பயன்படுத்தப் படுகின்றது. இவ் ஆய்வில் திரு அவையின் சமூகப் படிப்பினைகள், மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த உதவுகின்றன. திரு அவையில் நீதிசார் செயற்பாடுகள் திருவிவிலியத்தின் அடிப்படையிலே உணரப்படுவதனால் திரு அவையானது நற்செய்தியை ஏழைகளுக்கு அறிவித்து ஒடுக்கப்பட்டோருக்கு*

சுதந்திரத்தையும் துயருறுவோருக்கு மகிழ்வையும் கொடுப்பதையே அழைத்தலாகக் கொண்டு செயற்படுகின்றது. எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்பதால் சகோதரத்துவத்தின் அடிப்படையில் சமத்துவ, சுதந்திர உரிமைகள் பிறக்கின்றன. இவ் உரிமைகள் மீறப்படும் போது நீதியோடு கூடிய சமாதானத்துக்காக உழைப்பது திரு அவையின் கடமையாகும். இயேசு போராட்டங்களும் மோதல்களும் முரண்பாடுகளும் நிறைந்த சமுதாயச் சூழலோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இவ்வாறாக திரு அவையும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் போது இடம் பெறும் மனித மாண்பற்ற செயல்களுக் கெதிராக நீதிக் குரல் கொடுக்க முன் வர வேண்டும். அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத்துறைகளில் ஏற்றத்தாழ்வுகள் நிலவும் போது அவை மக்கள் மத்தியிலே போராட்டங்கள் எழுவதற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. எனவே திரு அவையானது மக்கள் மத்தியிலே ஏற்றத்தாழ்வுகள் நிலவும் போது அவர்களுக்கு உதவ முன் வர வேண்டும் எனும் விடயங்கள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** திரு அவையின் சமூகப் போதனைகள், மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், சமூக நீதி, மக்களின் உரிமை, அநீதி.